
# அச்சம்!



அறிஞர் அண்ணா

163146

# அச்சம்

அறிஞர்

## அண்ணா

விலை 20 காசு

அண்ணா பதிப்பகம்
19. சுந்தர விநாயகர் கோவில் - முதல் சந்து
சென்னை-11

வெளியீடு. 14
முதல் பதிப்பு, நவம்பர், '60

O-,5NAN,A
N60

உள்ளத்தை அள்ளும் உணர்ச்சி மிக்க கட்டுரைகள்,
கதைகள, கவிதைகள்—இலக்கிய ஆய்வுப்
புதையல்கள் அத்தனையும் கொண்ட கருத்துக்
கருவூலமாய் வெளிவருகிறது

"தமிழர் நாடு"

(தி. மு. க. வார ஏடு)

ஆசிரியர் : நாவா. கலைமணி

தனிப்பிரதி 13 காசுகள் எட்டுப் பக்கங்கள்

ஏஜண்ட் இல்லாத ஊர்களில் முன் பணம்
கட்டக் கூடிய ஏஜண்ட்டுகள் தேவை.

விபரங்கட்கு :

தமிழர் நாடு

1/19, ஆலத்தூர் சுப்பிரமணி ஆச்சாரி தெரு

சென்னை - 7.

163146.

---

அறிஞர் அண்ணாவின் சொல்லோவியங்களிலே மிகச் சிறந்த கருத்தமைந்த நூல் இது. இதனை உங்கள் முன் வைக்கிறோம்.

163146

# அச்சம்

சென்னை எழும்பூர் அறிவு வளர்ச்சி மன்றத் தோழர்கள், அச்சம் என்ற பொருள்பற்றி என்னைப் பேசவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இந்தப் பொருள்பற்றிப் பேசவேண்டுமென்று நேற்றிரவு ஒரு மணிக்குத்தான் எனக்குத் தெரியும். நண்பர் பொன்னம்பலனார் கூறினார்.

## அச்சம் நான்கணுவா ?

கூட்டங்களுக்குத் திடீர் திடீரென்று என்னைக் கூப்பிடுபவர்களுக்கு, இப்படியெல்லாம் தலைப்புகள் தரவேண்டுமென்ற விருப்பம் எனக்கில்லை. ஏனென்றால், அயல் நாடுகளிலே யெல்லாம் அச்சம் கருகிவருகின்ற வேளையிலே எழும்பூர் அறிவு வளர்ச்சி மன்றத்தினர் அச்சம் எனும் பொருள்பற்றி என்னைப் பேச வைக்கவும், ஆயிரமாயிர மக்களை இதுபோன்ற மன்றங்களுக்குள்ளே அழைத்து, அச்சத்தை நான்கணு டிக்கட்போட்டு விற்கவுமான அவர்களின் நிலையினைப்பற்றி மிகமிக வருந்துகிறேன்.

## அச்சத்தால்தான் வந்தேன் !

இந்தக் கூட்டத்தைப் பொதுக் கூட்டமாகவே நடத்தப்பட வேண்டுமென்று தோழர்கள் என்னைக் கேட்டதற்கு ஒப்புக்கொண்டேன். இப்போது கொட்டகைக்குள் நுழைவுக் கட்டணம்போட்டு நடத்தப்படுகிறது என்று தெரிந்தவுடன்

வராமலிருந்து விடலாமா என்று நினைத்தேன். ஆனால், பொதுமக்கள் என்ன நினைப்பார்கள். அண்ணாதுரை வருகிறேனென்று கூறிவிட்டு வரவில்லையே, இது அவனது வழக்கமான செய்கையல்லவா என்று கூறுவார்களென்ற அச்சத்தால்தான் இங்கு வந்தேன்.

ஒரு கட்சி, அது எந்தக் கட்சியானாலும் சரி, மக்கள் ஓய்வுபெற்று உல்லாசமாக இருக்கின்ற ஞாயிற்றுக் கிழமைகளிலே பொதுமக்களை சந்திக்க வேண்டும்; சந்தித்தால்தான் மக்களின் பேராதரவைப் பெறமுடியும். ஆனால், கொட்டகைக்குள்ளே டிக்கட்போட்டு நடத்தப்படும் சிறப்புக் கூட்டங்களைப் பெரிதும் வெறுக்கிறேன். இந்தக் கூட்டத்தை நடத்துபவர் எனது நண்பர்; என்னுடன் சிறையிலிருந்தவர். அவர் கோபிக்க மாட்டார் என்று நம்புகிறேன்.

அச்சம், மனிதனுக்கு அவசியமாக ஒரு சில நேரங்களிலே தேவைப்படுகின்ற பொருள்தான். அது தேவைப்படாத பொருளுங்கூடத்தான்! அதற்காக, அதைப்பற்றிப் பேசாமலிருக்கவும் முடியாது.

### அண்ணாதுரை அஞ்சாநெஞ்சனா ?

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, திராவிடர் கழகத்திலே நான் முதல் முதலாக பொது வாழ்க்கையில் ஈடுபட்ட நேரத்திலே, பெரியார் ராமசாமியுடன் கூட்டங்களுக்குப் போவேன். கூட்டம் கூட்டுகின்ற மதிப்பிற்குரிய தோழர்கள் ''அஞ்சா நெஞ்சன் அண்ணாதுரை வருகிறான்'' என்று என்னைப்பற்றி விளம்பரப்படுத்துவார்கள். நானே ஆச்சரியப்பட்டு, இவர்கள் இப்படி விளம்பரப்படுத்தும் நேரத்திலே, நான் என்ன அத்தகைய அஞ்சா நெஞ்சனா? ஏன் இப்படி அஞ்சா நெஞ்சன் என்று சொல்லுகிறார்களென்று, என்னை நானே கேள்வி கேட்டுக்கொள்வேன். நீங்கள் இதை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் தெரியும். கூட்டம் நடத்துகின்ற நமது தோழர்கட்கு, பிற எதிர்ப்புகளால் ஏற்படுகின்ற அச்சத்தால், தன்னைத்தானே தேர்வுபடுத்திக் கொள்வதற்காக இதோ

அண்ணாதுரை, அஞ்சா நெஞ்சன் வருகிறான் பார் என்று விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். கல்லால் அடிப்பார் களா? அஞ்சா நெஞ்சன் அண்ணாதுரை இருக்கிறார்! தடியால் தாக்குவார்களா? அஞ்சா நெஞ்சன் அண்ணாதுரை இருக் கிறார் என்று பொதுமக்களுக்கு கூறும் முறையில் விளம்பரப் படுத்தினார்கள்!

ஏன் அப்படிச் செய்தார்கள் என்று எண்ணும்போது அவர்களையும் அச்சம் அடிமை கொண்டுவிட்டது என்றுதான் பொருள்!

## அச்சத்தைப்பற்றி அறிஞர்கள்!

அஞ்சுவது, அஞ்சாமை, பேதமை என்று வள்ளுவர் சொன்னார். நமனை அஞ்சோம்–நாயன்மார்கள்சொன்னார்கள். நெஞ்சு பொறுக்குதில்லையே–இந்த நிலை கெட்ட மனிதரை– நினைந்துவிட்டால், அஞ்சியஞ்சி சாவார்–அவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே–என்று பாரதியார் பாடினார். இராவணனது அஞ்சாமையின் திறத்தைப்பற்றிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்

## அரசுக்கும் அச்சமா ?

அச்சம் மக்களின் நினைவைவிட்டு நீங்குமா என்று கேட்டால், அது யாரையும் விட்டு நீங்காது. சர்க்கார் நம் கூட்டங்களுக்கு வந்து குறிப்பெடுக்கிறார்களே, அதன் பொருள் தானே அச்சம். அவர்கள் அச்சத்தின் பிரதிநிதி களாக இருப்பதால்தான் இயக்கங்களை நடத்துபவர்களும் அச்சப்படுகிறார்கள்.

அச்சம் சில சமயங்களிலே தேவைப்படுகிறது. பெரு வாரியான நேரங்களில் தேவைப்படாதது. அதற்காக அதை அடியோடு வெறுப்பதற்குமில்லை. சாதாரண காரியங்களை விட்டுவிட்டு உங்களைச் சர்வதேச காரியங்களைக் காண அழைக்கிறேன்.

## அமெரிக்கா அச்சம்!

ரஷ்யாவைக் கண்டு அமெரிக்கா அச்சப்படுவானேன் அமெரிக்கா ரஷ்யாவைக் கண்டு ஏன் அச்சப்படுகிறது. பெரிய பெரிய ஆட்சியை நடத்துபவர்களுக்குள்ளேயே ஏன் அச்சம் ஏற்படுகிறது?

பல்லாண்டுகளாகப் பாடுபட்டு—அரும்பெரும் தியாகங்களைச் செய்து—ரத்தத்தையும்—பிணங்களையும் மலை மலையாகக் குவித்து உருவாக்கப்பட்ட தன்னுடைய பொதுவுடமைத் திட்டம் தகர்க்கப்பட்டுவிடுமோ வென்று அமெரிக்காவைக் கண்டு ரஷ்யா அச்சப்படுகிறது.

அமெரிக்காவிலே அருகுபோல் வேரூன்றி ஆல்போல் தழைத்துவிட்ட முதலாளித்துவம் அடிபட்டுவிடுமோ என்று அமெரிக்கா அச்சப்படுகிறது.

## அச்சம் எவருக்கு? எப்போது?

இருளிலே களவாடுகின்ற தர்மலிங்கத்திற்கு ஒளியைக் கண்டால் அச்சமேற்படுகிறது. வெளிச்சத்திலே யிருந்து பழக்கப்பட்டுப்போன பணக்காரனுக்கு இருளிலே செல்வதற்கு அச்சமாயிருக்கிறது. நடுச் சாமத்திலே தனது காதலியினிடத்திலே காதலன் கொஞ்சு மொழி பேசும்போதுகூட அச்சம் எழுகிறது. வேலி ஓரத்து உழவன் அயலான் மாட்டை அடித்து ஓட்டும்போதும் அச்சப்படுகிறான். தொழிலாளி முதலாளியைக் கண்டால் அச்சப்படுகிறான். முதலாளி தொழிலாளியைக் கண்டு அச்சப்படுகின்ற நிலையும் ஏற்பட்டு விட்டது. வேலி ஓரத்து வேலப்பனிலிருந்து, ஐ. நா. சபைக் காரியதரிசிகள் வரைக்கும் அச்சம் உண்டாகும்போது, அண்ணாதுரைக்கு மட்டும் ஏன் ஏற்படாது?

## அச்சத்தின் உருவே ஆண்டவன்!

கடும் புயல்கள் வீச மரங்கள் வேரோடு சாயும்போது சமுத்திரத்திலே பெருங் கொந்தளிப்பையும் - இடியின்

கோர முழக்கத்தையும் கேட்டுப் பயந்த மனிதன் அச்சங் கொண்டான். அந்த நேரங்களிலேதான் ஆண்டவனைப்பற்றி நினைக்க ஆரம்பித்தான் மனிதன். ஆண்டவன் என்ற ஆதி காரணத்திற்கு மூலப்பொருளே அச்சம்தான்!

பொங்கி எழுகின்ற அலை! ஆட்டிப் படைக்கின்ற பூகம்பம்! காய்கின்ற கதிரவன்! வீசுகின்ற காற்று! இடிக்கின்ற இடி! இவைகளின் வேலைகளைக் கண்டு அச்சங்கொண்டு, ஏதோ ஒரு சக்தி நம்மை ஆட்டிப் படைப்பதாக எண்ணுகிறன். அந்தந்த வேலைகளைக் கண்டு ஒவ்வொரு பெயரையிட்டு அவைகளை ஆண்டவன் என்று உணர்ந்து கொண்டான் மனிதன். இவைகள் இயற்கையின் விளைவுகள் என்பதை எண்ணியிருந்தால் மனிதன் அச்சப்பட அவசியமில்லை—ஆண்டவன் அவதரிக்க வழியுமில்லை.

அச்சம் படிப்படியாக வளர ஆரம்பிக்கிறபோது மனிதனுக்கு உறுதியான தைரியத்தை ஏற்படுத்த நினைக்கிறன். உதாரணமாக, அச்சம் கொண்டவன் ஒரு பலசாலியைச் சந்திக்கிறன். இருவருக்கும் எந்தக் காரணத்தாலோ மோதுதல் ஏற்படுகிறது. பயப்படுகிற மனிதன் வேறொரு பெரிய பலசாலி மனிதனின் உதவியை நாடுகிறன். இதுபோல் ஒருவனுக் கொருவன் பலசாலி போட்டி ஏற்பட்டால் எப்படி இருக்குமோ அதுபோல் சக்திக்கும், அச்சத்திற்கும் ஏற்றவாறு ஆண்டவனை ஏற்படுத்திக் கொண்டான் மனிதன். ஆகவேதான் ஆண்டவன் நாட்டிலே அவதரிக்க அச்சமே மூலப்பொருள் என்று சொல்லுகிறேன்.

### அச்சமும் போலீசும்!

திருச்சியிலே எனது நண்பர் வீட்டிலே பல ஆண்டுகட்கு முன்பு தங்கியிருந்தேன். அப்போது என்னுடன் ஒரு நண்பர் வந்திருந்தார். சாமான்கள் களவாடப்பட்டதென்று தெரிந்த உடையணியாத போலீஸ்காரர்கள் பின் வந்தார்கள். அவர்கள் எதிர் வீட்டினுள் நுழைவதை அங்கிருந்தவன் தடுத்து, யார் நீங்கள் என்று அதட்டிக் கேட்டான். அவர்கள் ஒரு பதிலும் சொல்லவில்லை. அதட்டிக் கேட்டவன் யாரோ

என்று அச்சப்பட்டு போலீசார்கள் வெளியே நின்று கொண்டிருந்தார்கள். அங்கே வந்த சப் இன்ஸ்பெக்டர் ஏன் நிற்கிறீர்கள் என்று போலீஸ்காரர்களைக் கேட்க, இவர்தான் எங்களைத் தடுத்து நிறுத்தினர் என்று பதில் சொன்னர்கள். சப் இன்ஸ்பெக்டர் சட்டையைக் கண்டதும் தடுத்து நிறுத்திய ஆள் பிடித்த ஓட்டம் கிண்டி ரேஸ் குதிரைகூட ஓடியிருக்காது ஓடியேவிட்டார்.

உடையணியாதவர்களை அதட்டித் தடுத்து நிறுத்திய தைரியம், உடையணிந்தவர்களைக் கண்டதும் எங்கே போயிற்று. முதலில் இருந்த தைரியம் பிறகு ஏன் அச்சத்தைக் கொடுத்தது?

### தி. மு. க. வைக் கண்டு அச்சம் !

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் செய்து வரும் பிரச்சாரம் மற்ற கட்சிகளுக்கு அச்சத்தைத் தருகின்றது. சர்க்காருக்கும் சஞ்சலத்தை உண்டுபண்ணுகிறது. ஏன்? மக்களின் அச்சத்தைப் போக்கவும், அச்சம் அவர்களிடம் குடிகொள்ளாமலிருக்கவுமான முறையில் தி. மு. க. உழைத்து வருகிறது,

### வேப்ப மரத்தைக் கண்டும் அச்சமா ?

நம் நாட்டில் காணப்படுகின்ற வேப்பமரம் உலகெங்கும் காணப்படுகிறது. அறிவையும், ஆராய்ச்சியையும் உடைய மேல் நாட்டான், வேப்ப எண்ணெயைக் காய்ச்சித் தைலமாக்கி மருந்துக்கும், சோப்புக்கும் பயன்படுத்துகிறன். அதே வேப்பமரத்தை நமது நாட்டிலேயும் பயன்படுத்துகிறர்கள், அதுவும் இருவகையாகப் பயன்படுத்துகிறர்கள். ஒன்று வேப்பம் இலையை மந்திரிக்க; இரண்டு அதன் குச்சியைப் பல்துலக்க!

அச்சத்திலிருந்து விடுபட்ட மேல் நாட்டான் அறிவு பெற்றன்; ஆராயத் தொடங்கினன், சோப்புக் கட்டிகளைச்

O-,5NAN,A
N60
163146

செய்கிறான், மருந்துக்கும் உபயோகிக்கிறான். லார்டு கிளைவ் இந்த வியாபாரத்தைச் செய்யத்தான் இந்தியா வந்தான்.

அச்சத்திலிருந்து விடுபடாத நாம், அதே வேப்ப மரத்தை, மாந்திரீகத்திற்கும், ஆண்டவன் அனுக்கிரகத்திற்கும் பயன்படுத்துகிறோம். காரணம், நம்நாட்டு மக்கள் அறிவுபெற முடியவில்லை; ஆராய அறிவு வரவில்லை!

### பரமாத்மா கிருஷ்ணனும் சர் ஐசக் நியூட்டனும்

மகாபாரதத்திலே கதை ஒன்று வருகிறது. மரத்திலேயிருந்து கனிந்து முதிர்ந்த பழம் ஒன்று கீழே விழுகிறது. பரமாத்மா கிருஷ்ணன் அதைப் பார்க்கிறார்; ஆராய்கிறார் தனது சிந்தனையை. உடனே பஞ்ச பாண்டவரை அழைத்தார். தருமா, நீ நீதிநெறியை உணர்ந்தவன், பொய் பேசாதவன் என்று உலகம் புகழ்கிறது. பீமா, நீ பெரிய பலசாலி, உன் கதாயுதம் சர்வ வல்லமை யுடையது தான். அருச்சுனா, நீ வில் வித்தையில் ஈடு இணையில்லாதவன், சகாதேவா, நீ கைதேர்ந்த சாஸ்திரம் படைத்தவன், எல்லோருமே சகல வித்தைகளிலும் வல்லவர்கள், உலகம் போற்றும் வீரர்கள், இதோ இந்தப் பழம் இந்த மரத்திலேயிருந்து கீழே விழுந்து விட்டது. உங்களுடைய சக்தியால் மீண்டும் இந்தப் பழத்தை மரத்திலே ஒட்ட வையுங்கள் பார்ப்போம் என்று சொன்னார்.

அது எப்படி முடியும்? உதிர்ந்த கனியை ஒட்டவைக்க முடியாது பரமாத்மா, எங்களைச் சோதிக்காதீர்கள் என்று மறுமொழி கூறினார்கள்.

உங்களில் ஒவ்வொருவரும் இதுவரை யாரிடமும் சொல்லியிராத பரம ரகசியத்தை இப்போது சொன்னால் போதும், இந்தப் பழம் மீண்டும் போய் மரத்தில் ஒட்டிக்கொள்ளும் என்று கூறினார் பரமாத்மா!

பஞ்சபாண்டவர்களனைவரும், அவரவர்கள் ரகசியத்தை ஒளியாமல் பயபக்தியோடு கூறினார்கள். பழம் மரத்தில் ஒட்டவில்லை. பார்த்தார் பரமாத்மா, திரௌபதியை அழைத்து வரச் சொன்னார். திரௌபதி இந்தப் பழத்தை மீண்டும் மரத்

திலே ஒட்டவைக்க, பஞ்சபாண்டவர்களனைவரும் அவரவர் ரகசியங்களைக் கூறினார்கள் பழம் மரத்தில் ஒட்டியபாடில்லை. உன் மனதிலுள்ள ரகசியத்தை நீ சொல்லு என்றார்.

### பாஞ்சாலியின் பரம ரகசியம் !

தருமர் மிகவும் நல்லவர். தர்மசீலர், சாந்தவான். பீமன், சகல சாமர்த்தியமும் கொண்டவர், அவருக்கு ஈடு அவரே தான், அருச்சுனன் அழகில் மன்மதன், வில்வித்தையில் திறமைமிக்கவர். மற்றவர்களும் அப்படியே. இந்த ஐவர்கள் ஒருபுறம் எனக்குப் புருஷர்களாக இருந்தாலும், எனது மாமி குந்திக்குப் பருவமடையாத முன்பே சூரியனுக்குப் பிள்ளை பெற்று கர்ணன் என்ற பெயரால் வளர்ந்து துரியோதன னிடம் இருக்கிறாரே, அவரை ஆறுவது புருஷனாக அடைய வேண்டுமென்பதுதான் எனதுநெடுநாளைய ஆசை என்றாளாம் திரௌபதி. பழமும் உடனே மரத்தில் ஒட்டிக்கொண்டதாம்.

ஐந்து புருஷர்களை வைத்துச் சமாளிக்க முடியாதவள் ஆறுவது கர்ணன் மீது ஆசைப்பட்டேன் என்றதும், மரத்தி லிருந்து கீழே விழுந்த பழம் மீண்டும்போய் ஒட்டிக்கொண்ட தாம். இது பாரதக் கதைகளிலே ஒன்று!

### சர் ஐசக் நியூட்டன்

இதே நிகழ்ச்சியை—பரமாத்மா பார்த்த சம்பவத்தை— சாதாரண மனிதனும் பார்த்தான். மரத்திலிருந்த பழம் கீழே விழுவானேன் என்று சிந்தித்தான். பரமாத்மா சிந்தித்ததைப் போல அல்ல. கிருஷ்ணன் தனது சிந்தனையால் அந்தப் பழத் தின் மூலம், திரௌபதியின்நடத்தையை–பண்பை–குணத்தை நமக்கு அறிமுகப் படுத்தினார். ஆனால் அதே நிகழ்ச்சியைப் பார்த்தவன் பழம் ஏன் கீழே விழுந்தது ? மரத்திலிருந்த பழம் தரையை நோக்கி விழாமல், வானத்தை நோக்கி மேலே போகக் கூடாதா ? மரத்துக்கும் தரைக்கும் நடுவே நின்று விடக்கூடாதா ? என்று தனது சிந்தனையைச் செல வழித்தான். பலநாள் முயன்றான், படாதபாடு பட்டான்.

இரவென்றும் பகலென்ரும் பாராது, அன்ன ஆகாரமின்றி, அயராது சிந்தித்தான், அதன் காரணத்தை அறிந்தான். அவன் அறிவு ஆராய்ந்ததின் விளைவுதான் (Law of Gravitatoin) என்ற விஞ்ஞான உலகம். இன்று நாம் அனுபவிக்கின்ற விஞ்ஞான சாதனைகள். அந்தப் பேரறிஞர் சர் ஐசக் நியூட்டன் என்பவராவார்.

மேல் நாட்டார் அச்சத்தை ஒருபுறம் ஒதுக்கினர்கள். ஆராய்ச்சியோடு-தெளிவோடு-அறிவோடு - ஆராய்ந்தார்கள்-வெற்றி பெற்ருர்கள். நம் நாட்டுப் பரமாத்வால் முடியாததை-மேல் நாட்டில் சர்வ சாதாரணமான மனிதன் ஒருவன் செய்து காட்டினன்-சாதிக்க முடியாத காரியத்தைச் சாதித்து மக்களை வாழ வைத்தான். மனிதனுக்கும் தேவருக்கும் உள்ள மன்ப்பாங்கு இது! நியூட்டன் அச்சப்பட்டு கனியாவது காயாவது, கீழே விழுவதாவது மேலே போவதாவது, இயற்கையோடு போட்டியிட்டு வெல்ல மூடியுமா என்று நினைத்திருந்தால் நம்மால் இந்த விஞ்ஞான சாதனங்களை அனுபவிக்க முடியுமா ?

163146

## அச்சமற்ற மேல்நாடுகள்

கொந்தளிக்கும் கடலுக்கடியில் மேல் நாட்டான் கப்பலில் போகிருன் என்று நம் நாட்டாரிடம் கூறினல், அது எப்படி முடியும், அங்கே என் அப்பன் ஆதிசேஷன் பள்ளி கொண்டிருக்கிருரே என்று வேதாந்தம் பேசுவார்கள்.

கடலிலிருக்கும் நீர் நீல நிறமாயிருக்கிறதே ஏன் என்று ஆராய்கிருனே என்று சொன்னல் நம் நாட்டவருக்குத் திடீரென்று நீல மேக சாம்ப வண்ணனைத்தான் நினைவிலிருத்தத் தெரியுமே தவிர, கடல் நீர் நீல நிறமாயிருப்பதின் காரணம் தெரியாது ?

மேல் நாட்டான் இயற்கைகளையும் மற்றப் பொருள்களையும் அச்சமின்றி ஆராயத் தலைப்பட்டதினல்தான், நாம் நல்ல சாதனங்களைப் பெற முடிகிறது. நம் நாட்டார் அச்சப்படுகின்றனர். எதையும் செய்ய முடியாதவராயிருக்

கின்றனர். நமக்காக விட்டு விட்டுப்போன அச்சமெலாம் பாரதியார் கூறியபடி "அச்சமில்லை அச்சமில்லை" என்ற ஏட்டுச் சுவடிகளைத்தான். உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை என்றார். உச்சி மீது வான் இடிந்து விழப்போவதும் கிடையாது, நாம் அதற்காக அச்சப்படப் போவதும் கிடையாது. கற்பனைக் காக அச்சமில்லை யென்று பாரதியார் எழுதியிருந்தாலும், அவர் கருத்துப்படி நம் நாட்டான் அச்சத்தையேதான் பெற்று வாழ்கிறான், முன்னேற முடியாது திண்டாடுகிறான்.

பத்திரிகையிலே படிக்கிறார்கள் பறக்கும் தட்டு பறக் கும் தட்டு என்று! யூகம் தெரிந்தவர்கள் கருதுவார்கள் அது "தினத்தந்தி" என்று!

## அச்சமும் நாமும்

நாம் எதையெதையோ நினைத்துக்கொண்டு, இயற்கை யின் கோளாறுகளைக் கண்டு ஆராய்ந்து அறிவு பெற முடியாது, அச்சத்தின் பாற்பட்டு அவதிப்படுகிறோம். அதனால்தான் வள்ளுவர் சொன்னார் "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண் தறிவு" என்று. பேச்சுக்கு முக்கியம் கொடுத்துச் சொல்லி விட்டு, அடுத்து, "எப்பொருள் எத்தன்மைத்தாயினும்; அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றார். எந்தப் பொருள்களையும் ஆராய்ந்து பார் என்ற விஞ்ஞானக் கருத்துக்களைச் சொன்னார்.

நமது நாட்டில் அச்சம் என்ற பொருள் இருப்பதினால் தான், எதையெதையோ நம்புகிறார்கள். கண்டதையெல்லாம் கடவுள் என்கிறார்கள்!

## கடவுளுக்கும் அச்சம்!

இஸ்லாமியர்களுக்கு அல்லா இருக்கிறார். கிறிஸ்தவர் களுக்கு ஏசுநாதர் இருக்கையில்—நமக்கு மட்டும் ஏன் ஆயிரத் தெட்டு கடவுள்கள் இருக்கின்றனர்! நமக்கு அச்சம் கடவுள்

களிடத்திலே இருப்பதாலேதானே! இந்தக் கடவுளுக்கு சக்தி அதிகமா? அந்தக் கடவுளுக்கு சக்தி அதிகமா என்று எண்ணி யெண்ணி-பலப் பரீட்சைப் போட்டி நடத்துவதால்தான் பலப்பல கடவுள்களைத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார்கள். மக்களிடத்தே ஏற்பட்டுள்ள அச்சம், கடவுள் சக்திகளிடத்தே கூட அச்சத்தை உண்டு பண்ணியுள்ளது. கிறிஸ்தவர்கள் தைரியமாக ஏசுநாதரை நம்புகிறார்கள். இஸ்லாமியரும் தைரியமாக முகமது நபியை நம்புகிறார்கள். ஆனால் நாம் எதையெதையோ நம்புகிறோமே, ஏன் ?

## வாழ்க்கைக்கு வழி எது ?

கிறிஸ்துவர்கள் தமது பைபிளைத் தந்து விட்டு இது தான் வேதம், படி, அதன்படி நட, நன்றாக வாழ் என்று சொல்லுகிறார்கள். முகமதியர் குரானைத் தந்து விட்டு, இது தான் எங்கள் நபிகள் நாயகம் தந்த வாழ்க்கை முறைத் தத்துவம். படி, நன்றாக வாழ் என்கிறார்கள். நம்மால் அப்படித் தரமுடியுமா ? என்ன இருக்கிறது கொடுப்பதற்கு ?

நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், புராணப் புளுகுகள், இவைகள் வாழ்க்கைக்கு முறைகள் கூறுகின்றனவா ? அப்படியானால், ஒன்றுக்கொன்று ஏன் முரணாக இருக்கின்றன. அதனால்தான் போன வாரம் இதை விளக்கிக் காட்ட "கீழ்ப் பாக்கத்துக்குப்" போயிருக்கிறார்கள்; அடிகளார்களோடு ஆச்சரியார் உட்பட !

## ஆச்சாரியாருக்கும் அச்சம்

திரு. ராச கோபாலாச்சாரியார் தனது புராணக் கருத்துக்கு மதிப்பு எங்கே குறைந்து விடுகிறதோ என்ற ஆச்சத்தால் அவதிப்படுகிறார்.

ஒரு வீட்டிலே தகப்பன், தனயன், தமையன், தம்பி— தமக்கை தங்கை, மாமன், மைத்துனன்- தாய், பிள்ளை ஒருவருக்கொருவர் அடங்காது நடப்பார்களோ என்ற அச்சத்தால்தான், இராமாயணத்தைக் கை விடாதே என்று சொல்லுகிறார் என்று நினைக்கிறேன். ஏனெனில், தமிழர்களுக்குள்ளே சண்டைகள் மூளக் கூடாது, பண்புகள் காக்கப்படல்

வேண்டும் என்ற எண்ணத்தால் தான், அப்படிச் சொல்கிருர் போலும், தமிழன் மரபும்கூட அப்படித்தான்.

மனிதனுக்குத் தேவை, கள் குடியாமை, பிறர் மனை நுழையாமை, கள்ளச் செயல் புரியாமை, தீச்செயல் புரியாமையாகும்.

புராணங்களில் வரும் கதைகளைப் படித்து, ஒன்றை ஒரு பக்கத்திலே அதன் கருத்தை எழுதி வைத்துக் கொண்டு மற்ருெரு கதையைப் படித்து மறுபக்கத்திலே அதன் கருத்தை எழுதிப் படித்துப் பார்ப்பீர்களேயானுல், அதனதன் முரண்பாடுகள் நன்ருகத் தெரியும்.

## புராண முரண்பாடுகள்

இராமயணத்தைப் படித்து, அதன் கருத்தை அலசிப் பாருங்கள். மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட பலப்பல காட்சிகள் உங்களது கண்களுக்குத் தோன்றும். கள் குடிக்கக்கூடாது என்கிறது புராணம், இராமாயண வரலாறே பல இடங்களில் குடிவரலாருக இருக்கிறது. பகவான் கிருஷ்ணன் கதையைப் படித்தால், ராதை என்ற தன் மாமியையே மனைவியாக்கிக் கொண்டு ராதா ருக்மணி சமேதராய் வாழ்ந்தான்; அறுபதினுயிரம் கோபியா ஸ்திரீகளுடன் இன்பம் கொண்டு கூத்தடித்தவன்!

கள்ளச்செயல் புரிதல் கூடாது என்கிறதுஒரு புராணம். களவாடியே பக்தி பெற்ருன் கபீர்தாஸ் என்கிறது வேருெரு புராணம்!

திருடக் கூடாது என்கிறது ஒரு புராணம், திருமங்கையாழ்வார் திருடியே கடவுட் தொண்டு புரிந்தான்—ஆழ்வாராஞன்!

கஜாஞ பணத்திற்குக் கணக்குக் காட்ட வேண்டும் என்ருல், கணக்குக் காட்டாமல் பணத்தை விரயம் செய்து நரி பிடித்தார், அவரும் ஒரு நாயனுராஞர்!

பிறர்மனை நுழைதல் பாவம் என்கிறது புராணம். மகா விஷ்ணு பிறர் மனை புகுந்து பிருந்தையைப் புணர்ந்தான். திருட்டுத்தனமாக என்னை எப்படி கற்பழித்தாயோ அப்படியே உன் மனைவியை ஒருவன் கற்பழிப்பான் என்று சாப

மிட்டு அவளிறக்கவெந்த அவளது சாம்பலின் மேல் காமாந்த காரத்தால் கார்மேகவண்ணன் விழுந்து விழுந்து புரள—பரம சிவன் வந்து மறு ஜென்மத்தில் உனக்கு ராதையாகப் பிறப் பாள் என்று சொன்னாராம்! இப்படியா கதை எழுதுவது? இதைப் படித்தால் எந்த லட்சியத்தைத் தெரிந்து கொள்வீர் கள், இந்தப் புராணங்களைப் படிக்கா விட்டால் மனித குல ஒழுக்கமே அழிந்து விடுமே என்று அன்பர் ஆச்சாரியார் அச் சப்பட வேண்டாம்.

## ஏழை பணக்காரன் ஏன்?

இல்லாமை, இயலாமை, தெரியாமை, சிந்தியாமை. இவைகளில்லாமையால்தான் மனிதன் ஒழுக்கம் கெடுகிறான். உதாரணமாக-பணக்காரன் ஒருவன் நம் வீட்டிற்கு வந்தால் பழம் சாப்பிடுகிறீரா? பால் சாப்பிடுகிறீரா? விருந்து உண்கிறீரா? என்று கேட்கிறோம். ஏழை ஒருவன் வந்து குடிக்கத் தண்ணீர் கேட்டால் குழாயிருக்கும் இடத்தைக் காட்டுகிறோம். சாப்பாடு கேட்டால் ஓட்டலைக் காட்டுகி றோம். படுக்க இடம் கேட்டால் சத்திரத்தைக் காட்டுகி றோம். ஏன்? மனம் இப்படி மாறுபடுகிறது. மனித மனம் தானே செய்கிறது இப்படியெலாம்! அவனைச் சுற்றிலும் சூழ்ந்துள்ள அந்தஸ்து இவனை இப்படிச் செய்கிறது. ஏழையின் இல்லாமை இவனை இப்படிப் பேச வைக்கிறது. மனித ஒழுக்கம் கெடுவதே இது போன்ற செயல்களால் தான்.

## அச்சம் அகல வழி!

திராவிட முன்னேற்றக் கழகம் வாழ்க்கை அச்சத்தை நீக்க வேண்டுமென்று சொல்கிறது. "வாழ்வதற்கு வழி" என்ற அச்சத்தை நீக்கி விட்டுப் பாருங்கள். உணவு கிடைக் குமா என்ற அச்சத்தை நீக்கி விட்டுப் பாருங்கள்.

## அச்சம் பற்றி அமெரிக்க ஜனாதிபதி

வாழ்க்கை நடத்த, வயிறார உண்ண, வசதியாக இருக்க இடமில்லாதவன் எப்படி பிறருக்கு அச்சப்

163146



படாமலிருப்பான்? இதை எப்படி நீக்கமுடியும்? என்ளுல் நீக்க முடியுமா? உங்களால் முடியுமா அல்லது மற்றக் கட்சிகளாலாகுமா? முடியாது. ஆளுகின்ற அரசாங்கம் ஒன்ருல்தான் முடியும். இதைத்தான் அமெரிக்க ஜனதிபதி ரூஸ் வெல்ட் சொன்னுர் Fear of want என்று!

மக்கள் வாழ நல்ல திட்டம் கொண்டு வரவேண்டும். சர்க்கார் திட்டங்களைக் கொண்டு வரும்போது எவருக்கும் அச்சப்படுதல் கூடாது.

### காங்கிரசுக்கும் அச்சம்!

மில் முதலாளிகளை மிரட்டினல் ஆவடி காங்கிரசுக்கு 60 லட்சம் கிடைக்குமா கிடைக்காதா என்ற அச்சம் சர்க்காருக்கு. சர்க்காருக்கு முதலாளிகளைப் பற்றி அச்சம் ஏற்பட்டு, நல்லதை மக்களுக்குச் செய்ய முன்வர அச்சமேற்பட்டால், சர்க்கார் சர்க்காராக—நல்ல சர்க்காராக இயங்க முடியாது. பாரதியார் சொல்லியபடி அஞ்சியஞ்சிதான் சாகவேண்டிவரும்.

எனவேதான், தி.மு. கழகம், சர்க்காருக்கோ மற்ற கட்சிகளுக்கோ வைதிகர்களுக்கோ அச்சப்படாது, தனக்குத் தெரிந்த நேர்மையான கருத்தை, மக்களின் வருங்கால வாழ்க்கைக்கு வழிகாட்டும் வகையிலே எடுத்துச் சொல்லி வருகிறது.

### அச்சமெனும் அரவத்தைக் கொல்க!

அச்சம் என்ற பொருள் நம்மவர் யாவருக்கும் ஏற்படுதல் கூடாது. அச்சம் என்ற அரவம் சீறிவரின் அதை அடித்துக் கொன்று, முன்னேற்றம் காண உழைக்க வேண்டும். அச்சம் நமக்கு சர்வ சாதாரண ஒரு பொருள் என்று கருதி அயராதுழைத்தால்தான், நமது இலட்சியப் பாதையிலே நாம் மேலும் நன்கு முன்னேற முடியும். திராவிடநாடு திராவிடருக்காக, எதிர்ப்பு சக்திகளைக் கண்டு அச்சப்படாமல் உழைக்க முடியும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

---

மதுரம் பிரஸ், 222, தம்பு செட்டித் தெரு, சென்னை-1.

V.G.T. 11.5.71

G.T. முருகேசன் 26-12-67

G.T. கபாலி 27-12-67.

தயாராகிறது!

★

# எம். ஜி. ஆர்.

# புரட்சி

# நடிகரா?

அரசியல் தெரியாது பிதற்றும் அப்பாவி
களுக்கு ஆதாரத்துடன் பதில் தரும் நூல்.

கவர்ச்சிகரமான மூவண்ண மேலட்டையுடன்

விலை 25 காசு.

......................விற்பனை உரிமை :......................

அண்ணா பதிப்பகம்

சென்னை - 11.